# சிறுவர் அமுதம்

19.11.98

எண்ணம் 9 கிண்ணம் 11



சிறுவர் இலக்கிய மாத சஞ்சிகை

Kinder literarisches Magazin

அன்புச் சிறுவர் சிறுமியரே!

வருகிற வருடம் பத்து ஆண்டுகள் ஆகப் போகின்ற சிறுவர் அமுதத்தை நாங்கள் எவ்வளவு கஷ்டப் பட்டு எழுதிக் கொண்டு வருகின்றோம் என்பதை நீங்களே அறிவீர்கள். இச் சஞ்சிகையை எழுதுவதற்கு ஜேர்மன் றெட் க்றொஸ் (DRK) உம் எவ்வங்கேலிஷ கிர்ஷ கேளினும் (ev. Kirche Köln) நிதி விஷயத்தில் உதவி செய்தன. சில வாசகர்கள் நாங்கள் அவர்களிடம் கேட்டவாறு 40,- டீ.எம் எங்களுக்கு அனுப்பி உதவி செய்தார்கள். இந்தக் காசை நாங்கள் கணணி விஷயங்களுக்குப் பயன் படுத்தினோம்.

ஆனால் இப்போது DRKவிடமும் ev.Kircheவிடமும் நிதி அவ்வளவு இல்லாத காரணத்தால் அவர்கள் எங்களுக்கு இதுவரை கொடுத்த நிதியைக் குறைக்க வேண்டியுள்ளது. அதனால் நாங்கள் உங்களை வரும் வருடத்திற்கு 25,- டீ.எம் அனுப்புமாறு கேட்டுக் கொள்கின்றோம். (இவ்வுதவியை எல்லோரும் செய்வீர்கள் என்று நம்புகின்றோம். ). சந்தாப் பணத்தை இதுவரைக்கும் சிலர் 40,-டீ.எம் அனுப்பிய Kontonummerக்கு அனுப்பாமல் எங்களது

புது நம்பருக்கு அனுப்புங்கள் (புது நம்பர் ev.Kirche வின் பார்வைக்குள் உள்ளது).

நீங்கள் எல்லோரும் 25,- டீ.எம் அனுப்பி உதவுவீர்கள் என நாங்கள் எதிர்பார்க்கின்றோம், இல்லாவிடில் புத்தகத்தை நிறுத்த வேண்டிய கட்டாயம் எங்களுக்கு வந்து விடும்.

இதனை எழுதி (வங்கி மூலமாக). அனுப்புங்கள்:

**Ev. Kirchenkreis Köln-Nord, 50823 Köln**
**Kontonummer: 4603 2967**
**Bankleitzahl: 370 501 98**
**Stadtsparkasse Köln**
**Stichwort: "Rajeswaran"**

**Stichwort: "Rajeswaran"** என எழுதுவதை மறக்காதீர்கள். நீங்கள் இதனை எழுதாவிடில் காசு எங்களுக்கு வந்து சேராமல், **ev. Kirche** வுக்குப் போய்ச் சேரும்.

அன்புடன்
ஆசிரியை

சார்லி சப்ளின்



ஊனா நடிப்பத் தொழிலை விட்டு விலகிக் கொண்டது சார்லிக்கு மிகவும் சந்தோஷத்தைத் தந்தது. குடும்ப வாழ்வுக்காக ஊனா நடிப்பைக் விட்டு விலகிய பின் சார்லிக்கு மனைவியின் மீது கூடுதலான அன்பு ஏற்பட்டது. ஒருதடவை மனைவியான ஊனாவை அழைத்துக் கொண்டு கடைத்தெருவுக்குச் சென்றார். அங்குள்ள நகைக்கடை ஒன்றினுள் இருவரும் நுழைந்தனர்.

கையில் அணிந்து கொள்ளும் வைரக்கல் இளைக்கப்பட்ட கைச்சங்கிலியைக் கண்டதும் ஊனாவுக்கு ஆசையாக இருந்தது.

விலையைக் கேட்டதும் ஊனாவுக்கு ஏமாற்றமாக இருந்தது. வேற நகைகளைப் பார்ப்பதற்காக விலகிச் சென்றார் ஊனா. சிறிது நேரத்தில் விரைவாக அவரருகில் சென்ற சார்லி அவரை வீட்டுக்குச் செல்ல வேண்டுமென்று துரிதப்படுத்தினார். ஊனாவுக்கு அது ஆச்சரியத்தைத் தந்தது. “வீட்டில் ஏதும் வேலைகள் இல்லையே. எதற்காக இப்படி அவசரப்படுத்துகிறார்!” என்று எண்ணியபோதும், கணவரின் சொல்லுக்குக் கட்டுப்பட்டு விரைவாகக் காரில் சென்று ஏறினார். காரையும் விரைவாகவே ஓட்டிச் சென்றார் சார்லி.

ஊனாவுக்கு இது பயத்தை வரவழைத்தது. எதுவமே புரியாமல் ஊனா தடுமாறிய வேளையில், திடீரென்று காரை நிறுத்திய சார்லி தன் கோட்டுப் பையில் இருந்து கைச்சங்கிலியை எடுத்துக் காட்டினார். ஊனாவுக்குத் திகைப்பாக இருந்தது. “இவர் எப்போது கைச்சங்கிலியை வாங்கினார் எனக்குத் தெரியாமல். திருடியிருக்கிறார் போலிருக்கிறது.” என்று எண்ணியவாறே சார்லியைத் திரும்பக் கடைக்கே காரைச் செலுத்தும்படி சொன்னார்.

மனைவியின் நினைவைப் புரிந்து கொண்ட சார்லி நீ வேறிடத்துக்கு விலகிச் சென்ற வேளையில் நான் இதற்கான பணத்தைக் கொடுத்து இதனைப் பெற்றுக் கொண்டேன். உன்னைத் திகைக்க வைக்க எண்ணியே இப்படி நடந்து கொண்டேன்." என்று கூறியதும் இருவருமே சிரித்தக் கொண்டனர். சார்லியின் வாழ்வில் சார்லியைப் புரிந்து கொண்டு சார்லியின் வாழ்வில் இணைந்து கொண்டவள் ஊனா தான்.

சார்லியின் வாழ்க்கை மகிழ்ச்சிகரமாகச் சென்று கொண்டிருந்த வேளையில் சார்லியின் படமான மொன்சீர் வெர்டாக்ஸ் படம் சர்ச்சைக்குள்ளானது.

-தொடரும்-

## கிரகங்களும் அவர்களின் வரலாறும், குணங்களும் **(ASTROLOGIE)**

***சூரியன்:*** **Apollon** (gries.) , **Helios** (röm.)

வரலாறு சூரியக்கடவுளான அப்பொல்லோன்-ஹேலியொஸ்ஸின் ஒழி கீழுலகத்திலுள்ள இருட்ட உருவங்களைக் கொல்லும் சக்தி கொண்டது.

குணம் ஆண்மை, தன்னம்பிக்கை, மற்றவர்களை ஈர்க்கும் சக்தி கொண்டவர்களாகிய இவர்களை வாழ்க்கையை ரசிப்பவர்கள் என்று மட்டுமில்லாமல் வாழப்பிறந்தவர்கள் என்றும் கூறலாம்.

எண் சோதிட முறையில் சூரியன் முதலாம் எண்ணை ஆளும்.

ராசிகளில் சிம்மராசி சூரியனுடையது **(Löwe- 23.7-23.8)**

---

*புதன்:* **Hermes**(griesch.) **/Merkur** (röm.)

வரலாறு ஹெர்மஸ்-மெர்குர் சூரியக்கடவுளுக்கு அருகாமையில் இருந்தவர். வியாபாரத்தின் கடவுளான ஹெர்மஸ் மனிதர்களுக்கும் கடவுள்களுக்கும் இடையே தூதுவனாகவும் இருந்தார். சில புத்தகங்கள் புதனை ஹெர்க்குலஸ் (Herkules) என்றும் சொல்லுகின்றன.

குணம்: நன்றாகக் கதைக்கத் தெரிந்தவர்கள், புத்திசாலிகள், வியாபாரத்தில் சிறந்தவர்களாகிய இவர்கள் எதுவானாலும் அதில் குறைகளைத் தேடுபவர்கள்.

எண் சோதிடம்: ஐந்தாம் எண்

ராசி மிதுனம் (Zwilling 22.5-21.6)
கன்னி (Jungfrau 24.8- 23.9)

---

*வெள்ளி:* **Aphrodite** (griesch.) /**Venus** (röm.)

வரலாறு அ.ஃ.ப்ரோடிரெ-வேனுஸ் (காதலின் கடவுள்) கடவுள்களின் ராஜாவான ஸொய்ஸ்-ஜுபிட்டரின் மகள். அ.ஃ.ப்ரொடிரெ அழகிற்குப் பெயர் பெற்றவள்.

குணம்: அன்பு, அழகு, கலை, காதல், இனிமை போன்றவையை விரும்புபவர்கள், சின்ன விஷயத்திற்கும் மனம் நொந்து கொள்பவர்கள்.

எண் சோதிடம். ஆறாம் எண்

ராசி: ரிஷபம் (Stier 21.04-21.5)
துலாம் (Waage 24.9-23.10)

---

*நிலா:* **Artemis, Hera, Hekate** (griesch.)/**Luna**(röm.)

வரலாறு பலவிதமான கடவுள்களாக நிலாவை கிரேக்கர்கள் காட்டியுள்ளார்கள்.
ஆர்ட்டெமிஸ்: கன்னித்தன்மை (வேட்டையின் கடவுள்)
ஹேரா: தாய்மை (கடவுள்களின் ராணி)
ஹெகாா: கொடுமைத்தனம் (இருட்டுச்சந்திரனின் ராணி)

குணம்: மனிதனின் இருட்டுப் பக்கம், ஒருதரும் அறியாத அடிமனம், உருவாக்கும் சக்தி

எண் சோதிடம்: இரண்டாம் எண்

ராசி: கடகம் (Krebs 22.6-22-7)

---

## *செவ்வாய்:* Ares (griesch.)/Mars (röm.)

வரலாறு: ஆரெஸ்-மார்ஸ் சண்டைக்குரிய கடவுள் மட்டுமில்லாமல் பூப்பூக்கும் காலத்திற்கும் இவரே கடவுள். அ.்.ப்ரோடிரெ (தங்கை), ஸொய்ஸ் (தகப்பன்) இவர்கள் இருவராலும்தான் ஆரஸ்ஸின் கோபத்தைக் அடக்க முடியும்.

குணம்: ஆண்மை, நினைப்பதைச் செய்வது, சக்தி, பயமில்லாமை, சுதந்திரத்தை விரும்புவது

எண் சோதிடம்: ஒன்பதாம் எண்

ராசி: மேஷம் (Widder 21.3-20.4)
விருச்சிகம் (இதனைச் செவ்வாய் ப்லூட்டோவுடன் சேர்ந்து ஆழுகின்றது)
(Skorpion 23.10-22.11)

---

## *வியாழன்:* Zeus(griesch.), Jupiter (röm.)

வரலாறு ஸொய்ஸ்-ஜூபிட்டர்தான் கடவுள்களின் தந்தை (ராஜா). எல்லாக் கடவுள்களிலும் சக்தி கூடியவர் இவர்தான்.

குணம்: வழிகாட்டியாக இருப்பவர்கள், நியாயத்தை நம்புபவர்கள், சமயத்தின்மேல் நம்பிக்கை உடையவர்கள்

எண் சோதிடம்: மூன்றாம் எண்

ராசி: தனுசு (Schütze 23.11-21.12)

---

## *சனி* Chronos(griesch.), Saturn(röm.)

வரலாறு: க்றோனொஸ்-ஸரூர்ன் (உழவுத் தொழிலின் கடவுள்). சாதகத்தில் அவரது முடி அவரது பிள்ளைகள் ஒருவரால்தான் வீழ்த்தப்படும் என எழுதியிருந்ததால் தனது பிள்ளைகள் எல்லோரையும் கொல்ல முயற்சித்தார். இவரிடமிருந்து தப்பிய மகன் ஸொய்ஸால் இவரது முடி வீழ்த்தப்பட்டது.

குணம்: பழமைவாதிகள், பல கவலைகள், சோதனைகள் இவர்களின் வாழ்க்கையில் ஏற்படும்,

சனி மனிதனுக்கு வாழ்க்கையின் பொருளை விளக்குவிப்பது (விதியின் கடவுள்).

எண் சோதிடம் எட்டாம் எண்

ராசி: மகரம் (Steinbock 22.12-20.1)

## *உ ரானுஸ்:* Ouranus(griesch.) / Uranus(röm.)

வரலாறு இவர்தான் சனியின் தகப்பனார், உ ரானுஸ் காயாவால் (பூமியின் கடவுள்) உ ருவாக்கப் பட்டவர். இவர் காயாவுடன் பல ராட்சதர்களைப் பெற்றார்.

குணம்: புதனைப்போல், ஆனால் ஒரு படி கூடியது. திடீர் யோசனைகளும் திடீர் பதில்களும் இவர்களுக்குப் பிறக்கும், பழமையை அழித்துப் புதுமையை உ ருவாக்குபவர்கள்.

எண் சோதிடம் நாலாம் எண்

ராசி: கும்பம் (Wassermann 21.1-19.2)

---

## *நெப்டூன்:* Poseidon (griesch.) / Neptun (röm.)

வரலாறு: பொசைடோன்- நெப்டூன்தான் கடலின் கடவுள் (அதாவது எல்லாத்தையும் உ ருவாக்குபவர்).

குணம்: வெள்ளியைப்போல், ஆனால் ஒரு படி கூடியது, கற்பனை வளம் கூடியவர்கள் (கலைஞர்கள்), உள்மனம் சொல்வது போல் நடப்பவர்கள்.

எண் சோதிடம்: ஏழாம் எண்

ராசி: மீனம் (Fische 20.2-20.3)

---

*புளூட்டோ:* Hades (griesch.) /Pluto (röm.)

வரலாறு: ஹாடஸ், கீழுலகத்தின் கடவுள்.

குணம்: செவ்வாயை விட ஒரு படி கூடியது. எல்லாவற்றையும் அழிக்கக் கூடிய சக்தி மட்டுமில்லாமல் எல்லாவற்றையும் மாற்றும் சக்தியும் இவர்களிடம் உண்டு.

ராசி: விருச்சிகம் (Skorpion 23.10-22.11)

:::::::::::::::::::::::::::::::::::::::::::::::::::::::::::::

**லிங்கன்**

ஐக்கிய அமெரிக்காவின் ஜனாதிபதியாக இருந்தவர் ஆபிரகாம் லிங்கன். 1808ஆம் ஆண்டு



பெப்ருவரி மாதம் 12ஆம் திகதி கென்டக்கி என்னும் மாநிலத்தில் தாமஸ்லிங்கன் நான்ஸி தம்பதிகளுக்கு ஆப்பிரகாம்லிங்கன் மகனாகப் பிறந்தார். மரவேலை செய்பவராக இருந்த இவரது தந்தையார்,அந்தத் தொழில் தன் குடும்பத்தின் வறுமையைப் போக்காததால், மரவேலையைக் கைவிட்டு, விவசாயத்தை மேற் கொண்டார்.

நீக்ரோ மக்களின் அடிமைத்தனத்தை ஒழித்த ஆபிரகாம்லிங்கன், வறுமையின் காரணமாக இளமையில் ஒரு வருடம் மட்டுமே பள்ளிக்கூடத்தில் கல்வி கற்றார். பத்தாவது வயதில் தாயாரின் இறப்புக்குப் பின்; தந்தையாகிய தாமஸ் ஜான்ஸ்டன் என்ற விதவைப்பெண்ணைத் திருமணம் செய்தார். சிறியதாயார் ஓரளவு படித்தவராக இருந்தார்.

அவர் கைவசம் இருந்த சில கதைப்புத்தகங்களைத் தட்டுத்தடுமாறிப் படித்தார் லிங்கன்.

21வயது வரை தந்தையின் விவசாயத்துக்கு உதவியாக இருந்த லிங்கன் பலசரக்குக்கடை ஒன்றில் கணக்காளராக வேலை செய்து வந்தார். தானாகவே முயற்சி செய்து, புத்தகங்களை இரவல் வாங்கியும், நூல் நிலையத்தில் சென்று வாசித்தும் தன் அறிவைப் பெருக்கினார். சட்டப்படிப்பையும் தானாகவே படித்து முடித்த பின் வழக்கறிஞராகவும் கடமையாற்றினார்.

அரசியலில் கொண்ட ஈடுபாடு காரணமாக, தேர்தலில் வெற்றி பெற்றுச் சட்டமன்ற உறுப்பினராகவும், பின் ஐக்கிய அமெரிக்காவின் குடியரசுத்தலைவராகவும் உயர்ந்தார். நிறவெறியை ஒழித்துக் கட்டி, அடிமை வாழ்வை அழித்தவர் ஆப்ரகாம்லிங்கன் என்று சொன்னால் மிகையாகாது. ஆனாலும் லிங்கனுக்கு எதிர்ப்பானவர்களும் இருந்தார்கள்.

1863ஆம் ஆண்டு ஏப்பிரல் 14ஆம் திகதி நாடக அரங்கமொன்றில் நாடகம் பார்த்துக் கொண்டிருக்கும் போது ஜான் வில்க்ஸ்பூத் என்னும் நடிகனால் சுட்டுக் கொல்லப் பட்டார்.

# மனிதன்



கண்ணன் யோசனையில் இருந்தான். தாத்தா பெரியப்பா வீட்டில் இருந்து கண்ணனின் வீட்டுக்கு அன்றுதான் வந்திருந்தார். தாத்தா கண்ணனின் வீட்டிலே தான் இருந்தவர். இரண்டு மாதங்கள் பெரியப்பா வீட்டில் இருந்து விட்டுத்

திரும்பியிருக்கிறார். கண்ணன் எதுவும் பேசாமல் இருந்தது அவருக்கு ஆச்சரியத்தைக் கொடுத்தது.

"கண்ணா! என்று கூப்பிட்டார். கண்ணன் திரும்பிப் பார்த்தான். "ஏன் சோம்பலாக இருக்கிறாய்? உடம்புக்கு ஏதாவது செய்கிறதா? இங்கே அருகில் வா!" என்று அன்போடு கூப்பிட்டார். கண்ணனும் அருகில் சென்றான். கண்ணனின் நெற்றியில் கை வைத்துப் பார்த்தார். "சூடாக இல்லை. பின் ஏன் தான் சோம்பலாக இருக்கிறாய்?. அம்மா ஏசினாளா?" என்று பரிவுடன் கண்ணனைத் தடவிக் கொண்டு கேட்டார்.

"ஒன்றுமில்லைத் தாத்தா! எதைத் தான் செய்தாலும் அம்மா அடுத்த வீட்டு மாலாவைப் போல இரு. எவ்வளவு நல்ல பிள்ளையாக இரு என்று சொல்கிறா. அப்பாவும் சொல்கிறார். ஏன் தாத்தா நான் நல்லபிள்ளை இல்லையா? ஏன் அம்மாவும், அப்பாவும் அப்படிச் சொல்கிறார்கள்?". என்றான். தாத்தா சிரித்துக் கொண்டார். பின், "நீ என்ன குளப்படி செய்தாய்?" என்று கேட்டார். "கடைக்குப் போய் பந்து வாங்க வேண்டும் என்று கேட்டேன். அப்பாவிடமும் கேட்டேன். வேலைக்குப் போய் விட்டு வரும் போது வாங்கி வருகிறார்களாம்." என்றான்.

"வரும் போது வாங்கி வருவார்கள் தானே? பிறகென்ன?" என்றார் தாத்தா. "நானும் பார்த்து வாங்கலாம் தானே. அவர்கள் வடிவில்லாமல் வாங்குவார்கள்!" என்று கண்ணன் தேம்பியவாறே சொன்னான். தாத்தா கண்ணனை அணைத்துக் கொண்டார். பின் "தாத்தா தான் வந்து விட்டேனே! வா, இருவரும் சேர்ந்து கடைக்குப் போகலாம்." என்று கண்ணனைக் கூட்டிக் கொண்டு கடைக்குச் சென்றார். கண்ணனும் சிரித்துக் கொண்டு தாத்தாவின் கையைப் பிடித்துக் கொண்டு நடந்தான்.

## வினாவிடைப் போட்டி

1. நாட்டுக் கொடியை பயன்படுத்திய முதல் நாடு எது?
டெல்லி, கர்னன், மாம்பழம், சுவர், இலக்கியம்

2. உலகின் மிகச் சிறிய நாடு எது?
வானம், பிடித்தல், கங்கை, பிரமன்.

3. விண்வெளியில் நடந்த முதல்பெண்மணி யார்?
சாஸ்திரம், செல்வம், கட்டளை, விலாசம், வினாக்கள்.

4. இரும்பை விடவும் நாலுமடங்கு கனமான வாயு எது?
அபராதம், உடல், முன்னுரை.

5. நீரோடும் திசையில் இருந்து பின்புறமான நீந்தும் மீனின் பெயர்?
சால்வை, கல்வி, மலர், அன்பளிப்பு.

தயாரித்துஅனுப்பியவர்: செந்தூரன் குணபாலசிங்கம்.

சென்ற போட்டி முடிவு:
1.மியான்மர், 2.கனடா, 3.கோட்டை(), 4.ஷெக்கல், 5. சவுதிஅரேபியா.

() (முழுப்பெயர் ஜெயவர்த்தனக்கோட்டை. ஆனால் கோட்டை என்பது பொதுவான வழக்கு. கடைசி எழுத்துத் தவறாகி விட்டது.)

❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖

நன்றாகப் படித்து, பெரிய அறிவுள்ளவர்களாக இருந்தாலும், அடக்கம் உள்ளவர்களாக இருப்பது அவர்களுக்கு மதிப்பைத் தரும்.

-வெற்றி வேற்கை(நீதிநூல்)-

❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖

# பிள்ளைக் கனி அமுது



சின்னஞ் சிறு கிளியே- கண்ணம்மா
செல்வக் களஞ்சியமே!
என்னைக் கலி தீர்த்தே- உலகில்
ஏற்றம் புரியவந்தாய்!

சற்றுன் முகம் சிவந்தால்- மனது
சஞ்சலமாகுதடீ!
நெற்றி சுருங்கக் கண்டால்-எனது
நெஞ்சம் பதைக்குதடீ!

சொல்லு மழலையிலே- கண்ணம்மா
துன்பங்கள் தீர்த்திடுவாய்!
முல்லைச் சிரிப்பாலே- எனது
மூர்க்கம் தவிர்த்திடுவாய்1

இன்பக் கதைகளெல்லாம் உன்னைப்போல்
ஏடுகள் சொல்வதுண்டே?
அன்பு தருவதிலே உன்னை நேர்
ஆகுமோர் தெய்வமுண்டோ?

மார்பில் அணிவதற்கே- உன்னைப்போல்
வைர மணிகளுண்டோ?
சீர் பெற்று வாழ்வதற்கே-உன்னைப்போல்
செல்வம் பிறிதும் உண்டோ?
-மகாகவி. சுப்பிரமணியபாரதியார்-

❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖

ஒரு குழந்தை சீமானாகவோ, சீமாட்டியாகவோ வாழ்வதற்குக் கல்வி கற்பிக்க வேண்டாம். ஆனால் மனிதத்தன்மை கொண்டவர்களாக வாழ்வதற்குக் கற்றுக் கொடுங்கள்.

-ஹெர்பர்ட் ஸ்பென்ஸர்-

❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖

❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖

உங்கள் நம்பிக்கையை பணத்தின் மீது வைக்காதீர்கள். பணத்தை நம்பிக்கையான இடத்தில் வையுங்கள்.

-யாரோ-

❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖

# உடைகள்.



ஆதிகாலத்தில் குகைகளில் வாழ்ந்த மக்கள் மிருகங்களின் தோலை விரும்பி அணிந்தனர்.
ஆதிகால மனிதர் தோல்களைத் தசைநாரிலே தைத்து உடுத்தினர்.
உடைகளை நார்களால் பின்னத் தெரிந்து கொண்ட போதுதான் நெசவுக்கலை பிறந்தது.
மனித வாழ்க்கையில் அடுத்தபடியாக முக்கிய இடம் பெறுவது உடையாகும்.
உடைகளுக்கு ஆடை என்றும் பெயர் உண்டு.
உடைகளில் முதன்முதல் தோன்றிய உடை சட்டையாகும்.

உடைகள் ரோமம், பட்டு, பருத்தி என்பவற்றால் செய்யப்படும்.
நாட்டுக்கு நாடு உடைகள் வெவ்வேறு வடிவம் கொண்டவை.
நமதுநாட்டில் ஆண்கள் வேட்டி சட்டையும், பெண்கள் சேலையும் அணிகின்றனர்.
மக்களின் நாகரீகம் மாறமாற உடைகளும் புதிதாகத் தோன்றுகின்றன.

உடைகளின் பயன்கள்.

உடைகள் சூடு, குளிர் என்பவற்றில் இருந்து மக்களைப் பாதுகாக்கின்றது.
உடைகள் மானத்தைக் காக்கின்றது.
விதம் விதமான புதிய ஆடைகளாக இன்று உடைகள் காணப்படுகின்றன.
"ஆடை இல்லாதவன் அரைமனிதன்" என்னும் பழமொழியும் உண்டு.
அரைமனிதனை முழுமனிதனாக்குவதும் உடைகளே ஆகும்.

-சிவகாந் சிவராஜா-

❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖

ஒருவன் எந்த மனிதனுக்கு அஞ்சுகின்றானோ, அவனை நேசிப்பதில்லை.

-அரிஸ்டோட்டில்-

❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖



மாசிலாமணி ஆசிரியரைக் கண்டால் நூல்நிலையத்தில் இருப்பவர்களுக்குக் கொண்டாட்டம் தான். எந்த விஷயத்தையும் வேடிக்கையாகவும் விளையாட்டாகவும் மற்றவர்களுக்குக் கூறுவார். அன்றும் அப்படித்தான். கந்தசாமி தான் பசளை வியாபாரியிடம் ஏமாந்ததைப் பற்றிக் கூறிக் கொண்டிருந்த வேளையில் மாசிலாமணி ஆசிரியர் நூல் நிலையத்துள் புகுந்தார்.

காதில் அரையும்குறையுமாகக் கந்தசாமி கூறிக் கொண்டிருந்தது அவருக்குக் கேட்டது. அவர்

"என்ன கந்தசாமி மூக்கால் அழுது கொள்கிறாய்?" என்று கேட்டார். கந்தசாமியும் தன் கதையைக் கூறினார். அதற்கு மாசிலாமணி ஆசிரியர் "நான் ஒரு விஷயம் சொல்லுகிறேன் கேளும்." என்று கூறியதும் அங்கிருந்த அவரது சகாக்களும் ஆசிரியருக்குக் கிட்ட வந்தனர்.

"உலகில் ஐந்து விஷயங்கள் இருக்கின்றன. அவற்றை அறிந்து கொண்டவன் நல்ல முறையில் வாழ்கிறான்." என்று நிறுத்தி விட்டுப் பின் தொடர்ந்தார். கொடுமை, கர்வம், பொறாமை, மோசடி, தந்திரம்." என்றார். "இதைச் சற்று விளக்கமாகச் சொன்னால் என்ன?" என்றவாறே சிரித்தார் சண்முகம். அவர் மாசிலாமணி ஆசிரியரோடு ஒன்றாக வேலை செய்தவர்.

மாசிலாமணி சிரித்துக் கொண்டே, "முன்னே கூறிய ஐந்து விஷயங்களையும் ஐந்து விலை பொருட்கள் என்று வைத்துக் கொள்ளுங்கள். கொடுமையை யார் விலைக்கு வாங்குவார்கள்?."

"ஆளும் வர்க்கத்தினர்" என்றார் சண்முகம். சரி என்று தலையாட்டிய ஆசிரியர் "கர்வத்தை யார் விலைக்கு வாங்குவார்கள்?.".
"பணக்காரர்கள்." என்றார் சண்முகம். "இதுவும் சரி. பொறாமையை யார் வாங்குவார்கள்.

“அறிவாளிகள், அதாவது கல்விமான்கள்.” என்றார் சண்முகம்.

“சரி, அப்படியே வைத்துக் கொள்ளுவோம். மோசடியை யார் வாங்குவார்கள்?” ஆசிரியர் கூறி முடிக்கும் முன்னரே கந்தசாமி “வியாபாரிகள்” என்றார். “நூற்றுக்கு நூறு மாக்ஸ், கந்தசாமிக்கு” என்றதும் கந்தசாமி உட்பட எல்லோரும் சிரித்துக் கொண்டனர்.

“ஐந்தாவது தந்திரம். இதை யார் விலைக்கு வாங்க வேணும். இந்த உலகத்தில் நன்றாக வாழ வேண்டுமானால் தந்திரம் அதாவது தன்-திறம் தன் திறமையை அறிந்தவன். தன்னை அறிந்து கொண்டவன் கந்தசாமியைப் போல. தான் ஏமாளி என்று அறிந்து கொண்டாரே.” என்றதும் எல்லோரும் சிரித்தனர். கந்தசாமியும் தன் கவலையை மறந்து பலமாகச் சிரித்தார்.

❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖

கஷ்டங்களையும், நட்டங்களையும் கண்ட பின் தான் மனிதன் அதிக அடக்கமாக இருக்கக் கற்றுக் கொள்ளுகின்றான்.

-ஃபிராங்கிளின்-

❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖

# நொடிகள்

1.நீட்டுத் தொப்பிக்காரன் நீலக்கண்ணீர் வடிக்கிறான்.

2.ஆவென்று வாயுடையார், கண்ணீர் வடிப்பார்.

3.பகற்காவலன் தினமும் வருவான். இராக்காவலன்
ஒருநாள் வர மாட்டான்.

4.ஆட்டக்காரனுக்கு ஆயிரம் கண். ஆனால் பார்ப்பது
இரண்டு கண்.

5.நெருப்பில் பிறந்த கறுப்பன் நெடுவானில்
பறக்கிறான்.

விடைகள்:

1.பேனா,2.செக்கு,3.சூரியன்.சந்திரன்,4.மயில்,5.புகை

-கிரிசாந்மனோரஞ்சிதராஜா-

❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖

பிறரை இழிவாகப் பார்ப்பது எளிது. நம்மை இழிவாகப் பார்ப்பது கஷ்டம்.

-பீற்றர்பரோ-

❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖

❖

வைத்தியம் செய்வதற்கான மயக்க மருந்தை மனிதன் தான் கண்டு பிடித்தான் என்றில்லை. இயற்கையாகவே சில விலங்குகள் இதனை அறிந்திருக்கின்றன. பூச்சிகள் இதன் முன்னோடி என்று சொல்லலாம். அவைகளுள்ளும் குளவிகள் முக்கிய இடத்தைப் பிடிக்கின்றன. குளவி தன் கூட்டுக்குள் முட்டை இடும்போது புழுவாக வெளிவரும் தன் பிள்ளைக்காகச் சிலந்தி போன்ற பூச்சிகளை உணவாகக் கொண்டு வந்து வைக்கிறது.

அவை இறந்து விட்டால் அவை தன் பிள்ளைக்கு உணவாக முடியாதே! அதனால் பூச்சிகளைப் பிடித்ததும் அதன் குறிப்பிட்ட பகுதியில் தன் ஊசி போன்ற பகுதியால் கொட்டி விடுகின்றது. பூச்சிகள் இதனால் மயக்கமுற்றுத் தூங்கி விடுகின்றன. அதைக் குளவிகள் கூட்டுக்குள் வைத்து விடுகின்றன. முட்டையில் இருந்து வெளி வந்ததும் புழுக்கள் இப்பூச்சிகளை உணவாகக் கொள்ளுகின்றன.

❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖

கர்வம் தேவர்களையும் அரக்கர்களாக மாற்றி விடும். அடக்கம் மனிதர்களையும் தேவர்களாக மாற்றி விடுகின்றது.


-அகஸ்டின்-

❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖

Nektar für die Kinder

Nectar pour les enfants

Nectar for the childrens



உண்ண உணவின்றி,
உடுக்க உடையின்றி,
கல்வி அறிவின்றி,
யுத்தம், கலவரங்களால்,
இன்னலுறும் இளம்சிறார்களுக்கு
இச்சஞ்சிகையைக்
காணிக்கையாக்குகின்றோம்.

புனிதமலர் ராஜேஸ்வரன்

"Siruvar Amutham"
Alefstr- 11
50189 Elsdorf
GERMANY
02271 / 66527